மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தண்ணீர் இருக்கிற கிணறுகளுக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற ஒரு எண்ணம் அரசுக்கு இல்லை. படிப்படியாக 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து, வரிசையாக ஒவ்வொரு விவசாயிகளுக்கும் கொடுக்கப்படுமே தவிர, தண்ணீர் இருக்கிறது, எனக்கு கொடு என்றால் நிச்சயமாக கொடுக்கக் கூடிய எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வருடத்திற்கு 40 ஆயிரம் மின் இணைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டும், மோட்டார் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று இலாக்கா மூலம் அறிவிக்கப்பட்டு வாங்கி வைத்திருந்தும்கூட, என்னுடைய தொகுதியான குடியாத்தம் தொகுதியில் பல விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி உடனடியாக இணைப்பு வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் ஏற்கெனவே மின் வாரியத்திலிருந்து அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு இருந்தால், நிச்சயமாக அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, Change-over switch வைத்து air compresser மூலம் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி உடனடியாக தனி மின் இணைப்பு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு இல்லை.

சென்னை துரித இரயில் திட்டம்.

243—(* வினா எண். 174) திரு. மு. இராமநாதன் : திரு. என். பழனிவேல், திரு. எஸ். டி. உகம்சந்த் திரு. பெ. சு. திருவேங்கடம், மற்றும் திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1989 மே 11]

சென்னை துரித இரயில் திட்டம் எந்த ஆண்டு துவக்கப் பட்டது? ஆரம்பத்தில் அதன் மதிப்பு என்ன? வேலைகள் துரிதமாக நடைபெறாததற்குக் காரணம் என்ன? இது குறித்து தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரையிலான சென்னை துரித இரயில் திட்டம் மைய அரசு இரயில் இலாகாவால் 1983 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டு அவ்வாண்டே துவங்கப்பட்டது. திட்ட மதிப்பு ரூ. 53.46 கோடி. வேலைகள் துரிதமாக நடைபெறாமைக்கு நகர்ப்புற போக்குவரத்து திட்டக் குழுவினரால் (Planning Commission for Urban Transport Rail Projects) ஒதுக்கப்பட்ட பண ஒதுக்கீடு பற்றாக்குறையே காரணம். மைய அரசின் திட்ட ஒதுக்கீட்டுத் தொகை, இத்திட்டத்தின் தேவைக்கேற்ப அவ்வப்போது ஒதுக்கப்பட வேண்டும் என மைய அரசை கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கான தேவையான நிலம் முழுவதும் தமிழக அரசால் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் என்பது மிகப் பெரும் போக்குவரத்து நெரிசல் உள்ள இந்தச் சென்னை மாநகரத்திற்கு ஒரு இன்றியமையாத திட்ட மாகும். அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஏறத்தாழ 6 ஆண்டுக் காலத்திற்கு முன்பே தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்து இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனாலும் கூட இந்தத் திட்டம் ரொம்பவும் நத்தை வேகத் திலே போய்க்கொண்டிருக்கிற காரணத்தால், உடனடியாக அதற்குப் போதுமான அளவிற்கு—ஏன் என்றால், இங்கே ரூ.54 கோடி திட்ட மதிப்பீடு என்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆகவே இந்த 54 கோடி ரூபாய் தொகையும் வந்து சேருவதில் ஏதேனும் தாமதமா? அல்லது நிலம் ஆர்ஜிதம் போன்ற வேறு

வகையான சட்டச் சிக்கலினாலே தாமதமா? எனவே இது சம்பந்தமாக இருக்கிற சிக்கலை நிவர்த்தி செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசினிடத்திலே—இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு மேற்கொண்டு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு இதுவரையில் கிடைக்கப்பட்ட தொகை ரூ. 32.89 கோடியாகும். ஆனால் 1986 ஆம ஆண்டு கணக்குப்படி திட்ட மதிப்பீடு விலைவாசி கூடியதன் காரணமாக திட்டச் செலவு 107 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை மேலும் துரிதப்படுத்த இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்றபோது, ரயில்வே வாரியத் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை விரைவில் முடிக்கவேண்டும் என்ற கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் தென் இந்திய ரயில்வேயினுடைய பொது மேலாளரும், தமிழக அரசினுடைய அதிகாரிகளும் கலந்து பேசி சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த வேலைகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 53 கோடி ரூபாய் திட்டத்தில் துவக்கப்பட்ட இந்த துரித ரயில் பாதைக்கு 32 கோடி ரூபாய் செலவு செய்ததாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போது திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 107 கோடி என்கிறார்கள். ஆகவே இந்த 107 கோடி ரூபாயும் செலவு செய்வதற்கு இன்னும் எத்தனை ஆண்டுக் காலமாகும்? நம்முடைய இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு இந்த ஆண்டு ஒதுக்கிய தொகை எவ்வளவு? இதை மேலும் துரிதப்படுத்துவதற்கு நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9.85 கோடியாகும். இந்தப் பணம் முழுவதும் கிடைக்கப் பெற்றால் இன்னும் 4 ஆண்டுகளுக்குள் இந்த வேலை பூர்த்தியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 மே 11]

(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்திற்காக நம்முடைய மாநில அரசு நிதி ஒதுக்கித் தருவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. எவ்வளவு தொகையை ஒதுக்கித் தருவதாக நம்முடைய அரசு உள்ளது, அதற்கான பேச்சு வார்த்தை நடைபெற்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ரயில்வே வாரியத்தினுடைய மேலாளருடன், மத்திய அளவிலே உள்ள மேலாளருடன் நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது பேசினேன். அவர்கள் மாநில அரசு தன்னுடைய பங்குத் தொகையாக ஏதாவது தரவேண்டுமென்று கேட்டார்கள். மாநில அரசு ஏற்கெனவே நிலம் வழங்கியிருக்கிறது, அதை ஒரு பங்குத் தொகையாக நீங்கள் ஈடு செய்து கொள்ளவேண்டுமென்று நான் அவர்களிடத்திலே குறிப்பிட்டேன். இருந்தாலும் அவர்களிடத்திலே பணம் இல்லாத கஷ்டம் இருக்கிறது. எனவே அதற்காகவாவது நீங்கள் மாநிலத்தின் சார்பில் பணம் தர வேண்டுமென்று கேட்டார்கள். நான் தருவதாக ஒப்புக்கொண்டேன். ஆனால் அதை நீங்கள் கடனாகத்தான் எடுத்துக்கொண்டு திருப்பித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

வாடகை பாக்கி

குறுகிய கால வினா எண். 2—(*வினா எண். 4001), திரு. ஜி. பொன்னுபிள்ளை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் தோட்டத்தில் பொதுப்பணித் துறையைச் சார்ந்த வீடுகளில் வசிக்கும் முன்னாள் இந்நாள் சட்டப் பேரவை—மேலவை உறுப்பினர்கள் அரசுக்கு வாடகை பாக்கி ஏதேனும் செலுத்த வேண்டுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே; (அ) மற்றும் (ஆ): சென்னை அரசினர் தோட்டத்தில் பொதுப்பணித்துறையைச் சார்ந்த வீடுகளில் வசிக்கும் முன்னாள்–இன்னாள் சட்டப்பேரவை–சட்ட மேலவை உறுப்பினர்கள் 31—3—1989 முடிய அரசுக்கு செலுத்த வேண்டிய வாடகை பாக்கி ரூ. 7,17.724.20 ஆகும். (குறுக்கீடு)